விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், வேல்ராஜ் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 100 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீதனப் பொருட்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.

மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு - ஆதி திராவிடர் நலக்குழு சார்பில்

நெல்லை - மேலப்பாளையத்தில் பொதுக்கூட்டம்! சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் - ஞானதிரவியம் எம்.பி. பங்கேற்பு!

நெல்லை,செப். 30 -

நெல்லை மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மற்றும் ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (01.10. 2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் மேலப்பாளையம் பஜார் திடலில் மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் நவ்சாத் தலைமையில் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் முகமது அலி, முருகேசன், மூப்பன் அப்துல் காதர், ஆகியோர் முன்னிலையில் ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் நவநீதன்,பகுதி கழக செயலாளர் துபாய் சாகுல், ராஜாமுகமது ஆகியோர் வர வேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் லெட்சுமணன்,பேச்சிபாண்டியன், தீர்மான குழு உறுப்பினர் சீதாராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பெருமாள்,மாவட்ட அவைத்தலைவர் முருகன், துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,கிரிஜா குமார், பொருளாளர் சேகர், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,மேயர் சரவணன் துணை மேயர் ராஜ்,முன்னாள் பொருளாளர் அருண்குமார் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.கா.மணி ஆகியோர் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாநகர தொண்டரணி அமைப்பாளர் இம்மானுவேல் நன்றி கூறுகிறார்.

ரூ.50 லட்சம் மதிப்பில் - ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம் -

சிந்தலப்பட்டி ஊராட்சியில் சமுதாயக் கூடம்!

உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், செப். 30 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம், சிந்தலப்பட்டி ஊராட்சியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளருமான அர.சக்கரபாணி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஓடைப்பட்டி, குத்திலிப்பை, எல்லப்பட்டி, மார்க்கம்பட்டி, சின்னக்காம்பட்டி, இடையகோட்டை, வலையபட்டி, ஜோகிபட்டி, புளியமரத்துக்கோட்டை, புலியூர் நத்தம், கேதையுறம்பு, வெரியப்பூர், ஜவ்வாது பட்டி ஆகிய ஊராட்சிகளில் ரூ.962.14 இலட்சம் மதிப்பீட்டிலான சமுதாயக்கூடம், புதிய சாலை, பயணியர் நிழற்குடை, அங்கன் வாடி மையக்கட்டிடம் போன்ற பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தும், சமுதாயக்கூடம், நியாயவிலைக்கடைகளைத் திறந்து வைத்தும் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் இரா. ஜோதீஸ்வரன், வருவாய் கோட்டாட்சியர், ஒன்றிய பெருந்தலைவர் மு.அய்யம்மாள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் பா.சகுந்தலா பாலச்சந்தர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் செ.செல்வராஜ், ஒன்றிய அவைத்தலைவர் க.செல்லமுத்து, ஒன்றிய துணைச் செயலாளர்கள் ரா.தமிழ்செல்வி இராஜா, ஆ.ராமக்கிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் க.அழகியணன், மாவட்டப் பிரதிநிதிகள் நா.தங்கவேல், பெ.பெரியசாமி, சிந்தலப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் க.செல்வராஜ். சின்னக்காம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் ப.நிறைமதி. எல்லப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் ப.பபாலசுப்பிரமணி, இடையகோட்டை ஊராட்சி மன்றத்தலைவர் சு.சரவணன், ஜவ்வாது பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் வே.பழனிவேல், ஜோகிபட்டி ஊராட்சி மன்றத்தலைவர் க.சுப்பிரமணி, கேதையுறம்பு ஊராட்சி மன்றத்தலைவர் ச.ஆனந்தகுமாரி, குத்திலிப்பை ஊராட்சி மன்றத் தலைவர் ரா.லட்சுமி, மார்க்கம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் க.செல்லமுத்து, புளிய மரத்துக் கோட்டை ஊராட்சி மன்றத்தலைவர் இரா.தங்கராஜ், புலியூர்நத்தம் ஊராட்சி மன்றத்தலைவர் இரா.பூரணம், மார்க்கம்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் செ.செல்வி, குத்திலிப்பை, வலையபட்டி, இடையகோட்டை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் செ.ஜென்சி, இடையகோட்டை, ஜோகிபட்டி ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் செ.செல்வி, வெரியப்பூர், ஜவ்வாதுபட்டி ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் அ.தனலட்சுமி, ஓடைப்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் செ. செல்வி, புலியூர்நத்தம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆ.முத்து, புளியமரத்து க்கோட்டை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆ.யாகவன், வலையபட்டி ஊராட்சி முன்னாள் செயலாளர் சின்னச்சாமி உள்பட உள்ளாட்சிப் பிரதி நிதி களும், கழக நிர்வாகிகளும், அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் - நாளை நடைபெறுகிறது!

சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் அறிவிப்பு!

சிவகங்கை, செப். 30 -

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் நாளை (1.10.2023 -ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் திருப்பத்தூரில் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாநில இலக்கிய அணி புரவலரும் முன்னாள் அமைச்சருமான மு.தென்னவன் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் நான் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார்) வரவேற்றுப் பேசுகிறேன்.

இந்தக் கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் பங்கேற்க உள்ள இளைஞரணி கூட்டம் குறித்தும், மாநில இளைஞரணிகூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தலைவர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் கலைஞர் நூலகம் திறப்பதுகுறித்தும், மாரத்தான் போட்டிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

இதற்கான ஆலோசனைகளை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் வழங்க உள்ளார். எனவே இந்த கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், இளைஞரணி நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு நாகனி செந்தில்குமாமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம், சிந்தலப்பட்டி ஊராட்சியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளருமான அர.சக்கரபாணி திறந்து வைத்தார். உடன் ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் இரா.ஜோதீஸ்வரன், வருவாய் கோட்டாட்சியர், ஒன்றிய பெருந்தலைவர் மு.அய்யம்மாள், வட்டாட்சியர், ஊராட்சி மன்றத் தலைவர் க. செல்வராஜ் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி மற்றும் திருச்சுழியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீதனப் பொருட்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்கள்.

மாணவ - மாணவியர்க்கு வெள்ளை அங்கி அணிவித்தல் - பேராசிரியர்கள், மாணவர்களுக்கு விருதுகள் - பதக்கங்கள்!

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரியின் 59வது ஆண்டு விழா!

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்றுச் சிறப்புரை!

நெல்லை,செப். 30 -

நெல்லை மாவட்டம் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள கூட்டரங்கில் நெல்லை மருத்துவக் கல்லூரியின் 59 வது ஆண்டு விழா,முதலாம் ஆண்டு மாணவர்,மாணவியர்களுக்கு வெள்ளை நிற அங்கி அணிவிக்கும் விழா, மருத்துவ பேராசிரியர்களுக்கு மாணவர்களுக்கு விருது மற்றும் பதக்கங்கள் வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று மாணவ,மாணவியர் உட்பட 250 பேர்களுக்கு வெள்ளை நிற அங்கியை வழங்கினார்.

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கலையரங்கில் நடைபெற்ற முப்பெரும் விழா மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான்,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வஹாப்(பாளை) ரூபி மனோகரன் (நாங்குநேரி) சண்முகையா (ஓட்டப்பிடாரம்)துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதிபாலன் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நிகழ்ச்சியில் பங்கேற்று மருத்துவக் கல்லூரியின் 59 ஆண்டு விழாவை துவக்கி வைத்தும், முதலாம் ஆண்டு மருத்துவ மாணவர்களுக்கான வெள்ளை நிற அங்கியை (மருத்துவ உடைய) அணிவித்து சிறந்த மருத்துவப் பேராசிரியர்கள்,சிறந்த மாணவர் களுக்கான விருதுகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறைக்கு மிக சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். முதலமைச்சர் அவர்கள் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை உடன் இறுதிச்சடங்கு செய்யப்படும் என அறிவித்தார்கள். உடல் உறுப்பு தானம் செய்வதன் மூலம் மனித உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. உடல் உறுப்பு தானம் மற்றும் மருத்துவத்துறையில் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மருத்துவத் துறைக்கு பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

நெல்லை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 59 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு 2019-2023 ஆண்டுகளில் ஓய்வு பெற்ற 14 மருத்துவர்களின் சேவையை பாராட்டி புகழ் பெற்ற மருத்துவர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.2021 ஆம் ஆண்டுகளில் மருத்துவ துறையில் சிறப்பாக பணி செய்த பேராசிரியர்கள் மற்றும் துறை தலைவர்கள் 36 பேருக்கு சிறந்த சேவைக்கான விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.2022-2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த இளங்கலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்கள் 86 பேருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.14 நன்கொடை விருதுகள், முதலாம் ஆண்டு மருத்துவ மாணவ,மாணவியர்கள் 250 பேருக்கு வெள்ளை நிற அங்கிகள் அணிவித்து சிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த மருத்துவக் கல்லூரி ஒரு பசுமை வளாகமாகவும்,47 பிரிவுகளுடன் 2400 படுக்கை வசதிகளுடன் உள்ளது. தினம்தோறும் மருத்துவமனைக்கு 4000 க்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் வந்து பயன்பெறுகின்றனர். நாளொன்றுக்கு 1750 உள் நோயாளிகள் மருத்துவ பயன்பெற்று வருகிறார்கள். அரசு மருத்துவமனைக்கு சென்றால் சிறந்த மருத்துவம் கிடைக்கும் என்பது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.அரசு மருத்துவ சேவையை மக்கள் அதிகம் நம்பத் தொடங்கி இருக்கிறார்கள்.அரசு மருத்துவமனைக்கு போனால் சிறந்த மருத்துவம் கிடைக்கும் என்பது மக்களின் நம்பிக்கை அரசு மருத்துவ சேவை மக்கள் முழுமையாக ஏற்க தொடங்கி இருக்கிறார்கள். இதே மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அறுவை சிகிச்சை கட்டிடம் ரூபாய் 72 கோடியை 10 லட்சம் மதிப்பில் தரைத் தளத்துடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கிராமப்புறங்களில் இருந்து ஏராளமானோர் மருத்துவ பயன்பாட்டிற்க்கு வருவதால் இதற்கு பெரிய வகையிலான வசதிகள் செய்து தர வேண்டும் என்கிற வகையில் இந்த கட்டிடங்கள் கட்ட தாராளமாக நிதியினை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். 50 படுக்கையை கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் ரூபாய் 23.75 கோடி செலவில் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட உள்ளது.இந்த கட்டிட கூடுதல் கட்டிடமானது.கண்டியப்பேரி என்ற இடத்தில் ரூபாய் 35.18 கோடி செலவில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டிடம் ஒன்று நிறைவடையும் தருவாயில் உள்ளது.மிக விரைவில் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.

அதில் 15 வகையான ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் துணை சுகாதாரநிலைய கட்டிடங்கள், மருத்துவமனைக்கான கட்டிடங்கள், என்று ரூபாய் 178 கோடியே 4 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மருத்துவ கட்டமைப்புக்கு செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டங்கள் ஒரு சான்றாகும்.கடந்த நிதிநிலை அறிக்கையில் இந்த கல்லூரிக்கு 5 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டன.ஒன்று நவீன நரம்பியல் அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் வாங்குதல்,கட்டண படுக்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடுத்தர வர்க்கத்தினர் பொருளாதார ரீதியாக உயர்ந்திருப்பவர்கள் அரசு மருத்துவமனையில் பொது வார்டுகளில் சிகிச்சை பெறுவதை காட்டிலும் தனிவார்டுகள் இருந்தால் கட்டணம் செலுத்திய நாம் இருந்து கொள்ளலாம் என்று பல்வேறு கோரிக்கையில் விடப்பட்டது. கோரிக்கைகளை ஏற்று முதலமைச்சர் அவர்கள் சேலம், திருச்சி, மதுரை,கோவை போன்ற பல்வேறு இடங்களில் கட்டண வார்டுகள் ஒவ்வொரு வார்டுகளிலும் 1 படுக்கை அறை கொண்ட, 2 படுக்கையறை கொண்ட வார்டு தொலைக்காட்சி வசதியுடன் கட்டண படுக்கை அறை உருவாக்கி திறந்து வைத்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மருத்துவ துறைக்கு அதிக தேவைகள் பூர்த்தி செய்து வருகிறார்கள். டெங்கு தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வுகள் மேற்கொண்டு டெங்கு பரவுதலை தடுப்பதற்கான, தீவிரமான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

உலக சுகாதார அமைப்பின் மூத்த மருத்துவர் சௌமியா சுவாமிநாதன் கூறியது போல் வைரஸ்களோடு போராடி நாம் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.எந்த பேரிடர் வந்தாலும் தமிழகம் தமிழகத்தின் மருத்துவ கட்டமைப்பும் அதை தகர்த்தெறியும் இதற்கான மருத்துவர்களும், மருத்துவத் துறைக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றிய அரசின் தேசிய தர நிர்ணய திட்ட விருதுகள் 2013 ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்தன. அதில் கடந்த 11 ஆண்டுகளில் நமக்கு 478 விருதுகள் கிடைத்துள்ளன அதில் கடந்த ஆண்டில் மட்டுமே நமக்கு 239 விருதுகள் கிடைத்தள்ளது. மீதமுள்ள 10 ஆண்டுகளில் நமக்கு 239 அதாவது கடந்தாண்டில் மட்டுமே நமக்கு 50 சதவீதம் கிடைத்திருப்பது பெருமையாகும்.இதில் நெல்லை மாவட்டத்திற்கு பர்கெட் மாநகர்,கல்லூர் பெரியபிள்ளைவலசை ஆகிய சுகாதார நிலையங்களுக்கு விருதுகள் கிடைத்துள்ளன.

மேலும் விரைவில் நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நரம்பு அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள்,கட்டண வார்டு,முழு உடல் பரிசோதனை கூடம், கண் சிகிச்சை க்கான தனிப்பிரிவு,பச்சிளம் குழந்தைகளுக்குமான பராமரிப்பு ஆகிய 5 ம் விரைவில் இடம் பெற உள்ளது.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத மாவட்டங்களான தென்காசி, பெரம்பலூர்,காஞ்சிபுரம், மயிலாடுதுறை, ராணிப்பேட்டை,திருப்பத்தூர், ஆகிய மாவட்டங்களுக்கு விரைவில் மருத்துவ கல்லூரி மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

நிகழ்வில் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட துணை செயலாளர் தமயந்தி,நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெ. செல்வசூடாமணி, நெல்லை மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், பொறியாளர் அணி சாய் பாபா, உள்பட மருத்துவ கல்லூரி பேராசிரியர்கள், மாணவ - மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியன் நன்றி உரையாற்றினார்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன் நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலாண்டு மாணவர்கள் 250 பேருக்கும் வெள்ளை நிற அங்கி வழங்கியது குறிப்பிடத் தக்கது.

மதுரை வடக்கு மாவட்டம் சார்பாக மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அறிவுறுத்தலின்படி மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் அதிகமான உறுப்பினர் சேர்க்கை மாநில மகளிர் மாநாடு சிறப்பான முறையில் கலந்து கொள்வது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் அமைப்பாளர்கள் ரேணுகா ஈஸ்வரி, உமா சிங்கத்தேவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றதில் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மகளிரணி துணை அமைப்பாளர்கள், மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.